ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 ஆகஸ்ட் 1999 கானம் : 1

# செய்திகள்

## ஜூலை 10, 11, 12 தேதிகள்

ஹைதராபாத் ஸ்ரீ ரவிச்சந்த்ரன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற அஷ்டபதி பஜனை, திவ்யநாம பஜனை மற்றும் ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

## ஜூலை 28-ந் தேதி - குருபூர்ணிமா

பெங்களூர் மல்லேஸ்வரம் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடத்தில் (Vth Main Road, Malleswaram) ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி ஸபா ட்ரஸ்ட் (Regd.) சார்பில் நம் ஸ்வாமிகளால் வ்யாஸ பூஜை, காலை 7 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. மதியம் 2 மணி முதல் 4 மணிவரை வேத பாராயணமும் வித்வத் ஸதஸ்ஸும் நடைபெற்றன. மாலையில் 4 மணி முதல் 6 மணி வரை நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. இரவு 6.30 மணி முதல் 8.30 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாஸம் செய்தார்கள்.

## ஜூலை 28-ந் தேதி முதல் ஆகஸ்ட் 4-ந் தேதி வரை

பெங்களூர் மல்லேஸ்வரம் ஸ்ரீ காமகோடி சங்கர மடத்தில் தினமும் இரவு 6.30 மணி முதல் 8.30 மணி வரை நம் ஸ்வாமிகளின் உபன்யாஸம் நடைபெறுகின்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## ஆகஸ்ட் 7,8 தேதிகள்

பெங்களூர் மல்லேஸ்வரம் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடத்தில் ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலி சார்பில் நடைபெற இருக்கும், ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்


# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 5 ஆகஸ்ட் 1999 கானம் : 1

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 45 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 27 | 9 |
| 5. | சொல்லின் செல்வன் - 2 | 12 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு -15 | 17 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 21 | 25 |
| 8. | மனஇறுக்கம் - 3 | 26 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 48 | 31 |



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : பீம்ப்ளாஸ் தாளம் : ஆதி

பல்லவி

*கோவர்த்தனதர மூர்த்தே - ஆனந்த*
*வர்த்தனகர கீர்த்தே (கோவர்த்தனதர)*

அனுபல்லவி

*ஸுரப்யாபிஷிக்த ஸுரராஜபிமானஹர*
*ஸுஜனாபிவந்தித அபிநவ ஜலதர ஸுந்தர*
*(கோவர்த்தனதர)*

சரணம்

*வினீத ஜன ஸேவித கோவிந்த*
*விஶால வக்ஷஸ்தல வனமாலாதர*
*வ்யத்யஸ்தபாத ப்ருந்தாவனே ச*
*லலித முரளீதர லாவண்ய ரூப (கோவர்த்தனதர)*

To know more about mission activities and satsang events visit :

http://members.tripod.com/~madhuramurali

The Spiritual Magazine in English "Madhura Murali" is also available on Web.

# 45

ஸாதாரணமாக, நம் ஸ்வாமிகள் ப்ரேமிகபவனத்தில் இருக்கும் நாட்களில், காலையில் எழுந்து, ஸ்நாநம், அனுஷ்டானங்கள், ஜபம், பாராயணம் முடித்த பிறகு பெருமாளுக்கு திருவாராதனம் செய்வார்கள். ஸாதாரண நாட்களில், அதாவது ஏகாதஶீ போன்ற விசேஷம் இல்லாத நாட்களில், திருவாராதனம் முடிந்து எல்லோருக்கும் தீர்த்தப்ரஸாதம் கொடுக்க பதினோரு மணி ஆகிவிடும். அதன் பிறகு மத்யான அனுஷ்டானம், ஆஹாரம் எல்லாம் முடிந்த பிறகு, கடிதங்களுக்கு பதில் எழுதுவார்கள். க்ரந்தங்களைப் படிப்பார்கள். மாலையில் உபன்யாஸம் இருக்குமானால் அது விஷயமாக, க்ரந்தங்களைப் பார்த்து குறிப்பு எடுத்துக் கொள்வார்கள்.

பிறகு மாலையில் ஸ்நாநம், ஜபம், ஸஹஸ்ரநாம பாராயணம் முடிந்த பிறகு கீர்த்தனம் அல்லது உபன்யாஸம் இருக்கும். அதன் பிறகு டோலோத்ஸவம் நடைபெறும். இதைத் தவிர, முடிந்தபொழுதெல்லாம் பெருமாளுக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்துகொண்டிருப்பார்கள். ப்ரதி ஏகாதஶியும் ஸ்ரீ ஸௌந்தரராஜ பாகவதரின் திவ்யநாமபஜனை நடைபெறும். சனிக்கிழமை மற்றும் முக்கியமான தினங்களில் நம் ஸ்வாமிகளே திவ்யநாமகீர்த்தனம் செய்வார்கள். அடிக்கடி அநேக ஸாதுக்களும், பாகவதர்களும், வேத வித்வான்களும் வந்து கீர்த்தனம், ஸத்ஸங்கம், வேதபாராயணம் நடத்துவார்கள். ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஶர்மா ஸோமயாஜி தொடர்ந்து பாகவத பாராயணம் செய்து வருகின்றார்கள்.

ஒரு மஹாக்ஷேத்ரத்தில் கூட இப்படி ஒரு வைபவங்கள் நடக்குமா என்று தெரியாது. ஆனால், நம்முடைய பெருமாளுக்கு இப்படி நடந்து வருகின்றது. இத்துடன் மற்றொரு வைபவமும் எழுத ஆசைப்படுகின்றேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன், ஒருநாள் நம் ஸ்வாமிகள் டோலோத்ஸவம் முடிந்த பிறகு ஒரு ஆஸனத்தில் சுமார் ஒரு மணி நேரம் அமர்ந்திருந்தார்கள்.

ஸாதாரணமாக டோலோத்ஸவம் முடிந்தவுடன் எல்லோரும் கிளம்பி சென்றுவிடுவார்கள். ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்வார்கள். ஒரு சலசலப்பு இருக்கும். ஆனால் அன்று ஸ்வாமிகள் அமர்ந்தவுடன் அங்கு இருந்த அனைவரும் அப்படியே சிலை போல் அமர்ந்திருந்தனர். அந்த சூழ்நிலை முழுவதும் சுமார் ஒரு மணிநேரம் அப்படியே still ஆக இருந்தது.

ஒரு பேரமைதி அந்த சூழ்நிலையை அப்படியே கவ்விக் கொண்டது. அங்கிருந்தவர்களுக்கு எப்பொழுதும் இல்லாத ஒரு இனம் புரியாத ஆனந்தம் ஏற்பட்டது. எவ்வளவுதான் நான் அன்று அங்கு நிலவிய சூழ்நிலையைப் பற்றி எழுத முயற்சித்தாலும் அதை ஓரளவுதான் புரிய வைக்கமுடியும் என்று நினைக்கின்றேன். ப்ரேமிகபவனத்தில் லோக அஸாதாரணமான அமைதியும் ஆனந்தமும், அந்த சூழ்நிலை முழுவதும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் வ்யாபித்திருந்தது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள், ''ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்'' என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. மதுரமுரளி நான்காண்டு இதழ்கள் தனிபாகங்களாக வெளிவந்துள்ளன.

   ii) July '95 - Aug '96 ii) Sept '96 - July '97

   iii) Aug '97 - July '98 iv) Aug '98 - July '99

   இவை சென்னை ப்ரேமிகபவனத்தில் கிடைக்கும்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : நீங்கள் அடிக்கடி வேதாந்த உபன்யாஸம் செய்கின்றீர்கள். பக்தி உபன்யாஸங்களும் செய்கின்றீர்கள். அதை, அதைப்பற்றி சொல்லும்பொழுது அதையே மிகவும் உயர்ந்ததாகச் சொல்கின்றீர்கள், இதனால் எனக்கு மிகவும் குழப்பமாக உள்ளதே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : குழம்புவதற்கோ, குழப்புவதற்கோ இதில் இடமே இல்லை. நான் பலமுறை, ஒரு பகவானை அடைய த்யானம், கர்மயோகம், பக்தி, ஞானம் இவைகள் எல்லாம் பல்வேறு பாதைகள் என்பதை தெளிவாக எடுத்துரைத்துள்ளேன். அந்தந்த மார்க்கத்தில் செல்பவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஸாதனை க்ரமங்களையும் தெளிவாக எடுத்துரைக்கின்றேன். அந்தந்த மார்க்கத்தில் உள்ள அனுகூலங்களையும் ப்ரதிகூலங்களையும் சொல்கின்றேன். மற்ற மார்க்கங்களைப் பற்றி தெரிந்துகொள்வதில் தவறேதும் இல்லையே! அதற்காக நீங்கள் அனுஷ்டித்து வரும் பாதையை மாற்ற வேண்டிய அவஶ்யமும் இல்லை.

அது மட்டுமில்லை. அஷ்டாங்க யோகத்தைப் பற்றியும் விரிவாக கூறுகின்றேன். யாக யஜ்ஞாதிகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றேன். நான் பக்தி மார்க்கத்தையே அவலம்பித்து வந்தாலும் இவற்றையெல்லாம் எடுத்துக் கூறுவதில் எனக்கு தவறு ஒன்றும் தெரியவில்லை. குழம்புவதற்குக் காரணம் தங்களுக்கு ஸ்திரபுத்தி இல்லாததே!

*கேள்வி : இறைவனை தர்ஶனம் செய்வது அவ்வளவு சுலபம் இல்லை. மிகவும் கடினம் என்கின்றீர்கள். ஆனால் எப்பொழுதும் ஜபம் செய்ய வேண்டும், த்யானம் செய்ய வேண்டும், பக்தி செய்யவேண்டும் என்று கூறுகின்றீர்களே?*

பதில் : இறைவனை காண்பது கடினமே தவிர, முடியாது என்பது இல்லையே ! அத்தகைய த்யானமும், விடாமுயற்சியும் உள்ளவர்களுக்கே அது கிட்டும் என்பதுதான் உண்மை. என்றைக்கு இருந்தாலும், அதாவது இந்த ஜன்மாவில் இல்லாவிட்டாலும் அடுத்த ஜன்மாவில் அல்லது எந்த

ஜன்மாவிலாவது, நாம் இறைவனை அடைவதற்கான ஸாதனை செய்தே தீர வேண்டும். அதுவரை நமக்கு பிறவிகள் வந்துகொண்டே இருக்கும். கிடைத்தற்கரிய மனிதபிறவி கிடைத்தும் நாம் இறைவனை அடையாமல், பிறகு எந்தப் பிறவியில் இறைவனை அடையமுடியும்.

முதலில் ஸத்ஸங்கத்தின் வாயிலாக ஆர்வம், விவேகம், வைராக்யம், இவைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். தெய்வீகம் என்ற பெயரில் நீங்கள் கோழைகளாகவோ, சோம்பேறிகளாகவோ, பிரச்சனைகளிலிருந்து தப்பித்துக்கொள்பவர்களாகவோ ஆகிவிடக்கூடாது. முழுமையாக தெய்வீக ஸாதனைகளில் ஈடுபட்டு 'சோம்பேறித்தனம் இல்லாமல், விடாமல் ஸாத்வீகமாக, குரு காட்டிய வழியில் முயற்சித்து வரவேண்டும். நாம் முழுவதுமாக இறைவனைச் சார்ந்து, குடும்பத்தில் இருந்துகொண்டே மன அமைதியுடனும், விவேகத்துடனும், பந்தமில்லாமல், நம்முடைய கடமையை செய்துகொண்டு த்ருப்தியுடன் வாழ்ந்து வரவேண்டும். அவ்வப்பொழுது மனது சலனப்படுவது ஸ்வபாவம். ஆனால் விவேகத்தால் அதை அடக்கி நம் வசப்படுத்தவேண்டும்.

*கேள்வி : யாராவது உங்களிடம் சிரமங்களை எடுத்துரைக்கும் பொழுது, ''நம்மை விட சிரமத்தில் கஷ்டப்படுபவர்களை சற்று நினைத்துக் கொள். பெரிய கஷ்டமாக வராமல் போனதே என்று ஸந்தோஷப்படு'' என்கிறீர்கள். ஆனால், நான் ஏன் எனக்கு கீழுள்ளவர்களைப் பார்க்கவேண்டும்? என்னை விட சௌக்கியம் உள்ளவர்களைப் பார்த்து அது மாதிரியான சௌக்யம் எனக்கு ஏற்படவில்லையே என்று ஏன் நினைக்கக் கூடாது?*

பதில் : மன அமைதி அடையும் வழியை நான் கூறுகின்றேன். நீங்கள் மன அமைதியை இழக்கும் வழியை தேடிக் கொள்கின்றீர்கள். அது உங்களுடைய இஷ்டம்.

*கேள்வி : தாங்கள் எவ்வளவுதான் சொன்னாலும் என்னால் பகவானை ஏற்றுக்கொள்ள முடிகின்றதே தவிர குருவை ஏற்றுக் கொள்ள முடியவில்லையே.*

பதில் : தாங்கள் குருவை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை பெருமையுடன் கூறுகின்றீர்கள். உங்களைப் போல் உள்ளவரையும் ஒரு உத்தம குரு ஏற்றுக் கொள்ளவேண்டுமே என்று நான் கவலைப்படுகின்றேன்!

*கேள்வி : நான் ஸமீபத்தில் ஒரு ஸ்வாமிகளுடைய ஆஶ்ரமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு அவர்கள், கம்ப்யூட்டர் காலேஜ், டைலரிங் வகுப்பு எல்லாம் நடத்துகின்றார்கள். தாங்களும் ஏன் அப்படி ஏதாவது ஆரம்பித்து நடத்தக் கூடாது?*

பதில் : நீங்கள் சொல்வது மிகவும் அழகாக இருக்கின்றது. என்ன முட்டாள்தனம் இது. பகவான், உலகத்தில் ஸாதுக்களை, கம்ப்யூட்டர் காலேஜ் நடத்தவும், டைலரிங் வகுப்பு, ஐ.டி.ஐ. இவற்றையெல்லாம் நடத்துவதற்காகத்தான் அனுப்பிவைக்கின்றானாம்! எனக்கு இவையெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

*கேள்வி : ஒருவர் என்னிடம் நான் எவ்வளவு பக்தி கார்யங்களில் ஈடுபட்டேன். ஆனால் இன்று இவ்வளவு கஷ்டப்படுகின்றேன். நீயும் பக்தி செய்தால் கஷ்டம்தான் வரும் என்கின்றாரே!*

பதில் : வேதாந்த அடிப்படை இல்லாத பக்தி வீண் என்றும், பக்தி என்பது நம் கஷ்டத்தை போக்கிக்கொள்ள அல்ல என்று பலமுறை கூறியுள்ளேன். மேலும், தனக்கு எதெல்லாம் மனதில் தோன்றுகின்றதோ அதையெல்லாம் செய்துவிட்டு, அதற்கு பக்தி என்று பலர் பெயர் வைத்து விடுகின்றார்கள். இது தவறு. பக்தி என்பது மஹான்கள் காட்டிய வழியில் இருக்கவேண்டும்.

*கேள்வி : மஹான்களுக்கும் பாரபக்ஷ நிலை உண்டு என்று சிலர் சொல்கிறார்களே!*

பதில் : மஹான்களுக்கு அனுபவத்தில் எல்லாம் ஒன்று என்ற நிலை இருந்தாலும் வ்யவஹாரத்தில் பாரபக்ஷம் என்பது இருக்கத்தான் செய்யும். நிர்வாக விஷயத்தில் ஒரு பண்டிதனையும், வேலைக்காரனையும் ஸமமாக நடத்த முடியுமா என்ன? மனைவி, கணவனிடம் எப்படி நடந்து கொள்கிறாளோ அப்படி மாமியாரிடம் நடந்து கொள்ள முடியுமா? ஆகவே, எல்லாவற்றிலும் ஸமம் என்று சொல்வதும், வ்யவஹாரத்தில் மஹான்கள் செய்வதை பாரபக்ஷம் என்று சொல்வதும் அபத்தமானது.

# வேத கதைகள் - 27

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஸ ஶாஸ்த்ரிகள்

## வராஹ அவதாரம்

இப்பொழுது காணப்படுகிற மலைகள், நதிகள், ஸமுத்ரம் முதலிய உலகமானது, பூமி தோன்றுவதற்கு முன்பு ஜலமாகவே இருந்தது. ஜலம் மட்டும் தான் இருந்தது என்றால் வேறு ஒன்றும் இல்லை. அப்பொழுது பகவான் உருவமுள்ள உடல் இருப்பதற்கு இருப்பிடம் இல்லாததால் காற்றாக மாறி அந்த ப்ரளய கால ஜலத்தில் எங்கும் ஸஞ்சாரம் செய்தார். ஸஞ்சாரம் செய்து ஜலத்தில் முழுகிய பூமியைக் கண்டு, தான் வராஹ அவதாரம் எடுத்து, கோரை பற்களின் நுனியால், அந்த பூமியை ஜலத்திற்கு மேல் ஆதார சக்தியால் நிலை நிறுத்தினார். பூமியை நிலை நிறுத்தி வராஹ உருவத்தை விட்டு யாவற்றையும் படைக்கக்கூடிய விஶ்வகர்மாவாக ஆகி அந்த பூமியில் உள்ள ஜலபாகத்தை விலக்கி அதை பரப்பினார். அதிலிருந்து தற்சமயம் நம்மால் காணப்படுகிறதும் எல்லா ப்ராணிகளுக்கும் ஆதாரமாக உள்ளதுமான பூமி ஏற்பட்டடது.

ப்ருதிவி என்றால் பரவியது என்று பொருள். பகவானால் பரப்பபப்பட்டதால் இந்த பூமிக்கு ப்ருதிவி என்ற பெயர் ஏற்பட்டது. அந்த பூமியில் பகவான் தன் உருவத்துடன் இருந்து படைக்க விரும்பியவராக தவம் புரிந்தார். அந்த தவத்தின் திறமையால் வஸுக்கள் எட்டு, ருத்ரர்கள் பதினொன்று, ஆதித்யர்கள் பன்னிரண்டு என்ற தேவ கணங்களை படைத்தார். அந்த வஸு முதலானவர்கள் பகவானை குறித்து ப்ரஜைகளை படைப்பதற்கான உபாயம் கேட்டனர்.

உடன் பகவானும், என்னை போல் தவம் புரிந்தால் பிறகு ப்ரஜைகளை படைப்பதில் உங்களுக்கு ஆவல் ஏற்படும் என்று கூறி ஹோமம் என்கிற தவத்திற்கு ஆதார பூதமான அக்னியை அளித்து, இந்த அக்னியால் ஹோமம் என்ற தவத்தை புரியுங்கள் என்று கூறினார். அவர்களும் ஒரு வருட காலம் அவ்விதம் செய்து முடிவில் எல்லோரும் ஒரு பசுவை படைத்தனர். அந்த பசுவை பகவான், பசுவின் பாதுகாப்பின்

பொருட்டு வசுக்களுக்கு அளித்தார். அவ்விதம் நன்கு பாதுகாக்கப்பட்ட அந்த பசுவானது வஸுக்களின் பொருட்டு 333 பசுக்களை உண்டு பண்ணியது. பிறகு பகவான், அதே பசுவை, பாதுகாப்பின் பொருட்டு ருத்ரர்களுக்கு அளித்தார். ருத்ரர்களால் நன்கு பாதுகாக்கப்பட்ட அந்த பசு ருத்ரர்களுக்கும் 333 பசுவை அளித்தது. பிறகு பகவானால் ஆதித்யர்களுக்கு அளிக்கப்பட்ட அந்த பசுவானது ஆதித்யர்களுக்கும் 333 பசுவை அளித்தது. இவ்விதம் ஒன்று குறைவாக ஆயிரம் பசுக்கள் ஏற்பட்டன.

ஆயிரமாவதாகமாக ஸஹஸ்ரதமி என்ற பெயருடன் இந்த பசுவே ஆயிற்று. பிறகு வஸு, ருத்ர, ஆதித்யர்கள் ஒன்று கூடி ஆயிரம் பசுக்களை தக்ஷிணையாக அளித்து செய்யக்கூடிய யாகத்தை பகவானிடம் வேண்டினர். பகவானும் மூன்று தினங்களில் வஸுக்களுக்கு அக்னிஷ்டோமம், ருத்ரர்களுக்கு உக்த்யம், ஆதித்யர்களுக்கு அதிராத்ரம் என்ற யாகங்களை நடத்தி வைத்தார். இந்த யாகங்களால் அம்மூவரும் மூன்று உலகத்தையும் ஜயித்தனர். யாகத்தில் அவரவர்களுக்கு கிடைத்த 333 பசுக்களை தக்ஷிணையாக ருத்விக்களுக்கு அளித்தனர்.

வஸுக்கள் பூலோகத்தையும், ருத்ரர்கள் அந்தரிக்ஷ லோகத்தையும், ஆதித்யர்கள் தேவ லோகத்தையும் ஜயித்தனர். இவ்விதம் ஜயம் ஏற்பட்டபொழுது ருத்ரர்களால் ஜயிக்கப்பட்ட அந்தரிக்ஷ லோகமானது, சிதறி போயிற்று. ருத்ரர்களுக்கு அந்தரிக்ஷ லோகம் இருப்பிடமாகிறது. ருத்ரர்களுக்கு வீடு போன்ற அந்தரிக்ஷ லோகமானது சிதறி போனதால் இருப்பிடம் அற்ற ருத்ரர்கள் கோபம் கொண்டனர். அந்த கோபத்தால் எல்லா ப்ராணிகளையும் துன்புறுத்தினர். சிதறிய அந்தரிக்ஷ லோகத்தை த்ருடபடுத்துவதற்காக ரிக்வேதத்தில் கூறப்பட்ட சில மந்த்ரங்களை ஜபித்தனர். அதனால் அது த்ருடமானது. ருத்ரர்களின் கோபமும் அகன்றது.

இவ்விதம் பூமிதான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக ஆகிறது. இப்படிப்பட்ட பூமியை பகவான் வராஹ அவதாரமெடுத்து நிலை நாட்டினார். தேவர்களும் யாகம் செய்தனர். பகவானால் அளிக்கப்பட்ட ஒரு பசுவின் உதவியால் ஆயிரம் பசுக்கள் ஏற்பட்டன. இந்த வரலாற்றினால் வராஹ அவதாரம், பசுவின் படைப்பு முதலிய அரும்பெரும் விஷயங்கள் நமக்கு புலப்படுகின்றன.

பாகவதத்தில் உள்ள வராஹ அவதாரத்திற்கும் இந்த கதைதான் மூலமாகிறது. பகவான், ஸ்வாயம்புவமனு, ஶதரூபா என்ற தம்பதிகளை முதலில் படைத்தார். "இந்த பூமிக்கு நீ அரசனாக இரு" என்று மனுவிற்கு கட்டளையிட்டார். அப்பொழுது இந்த பூமியானது பாதாளத்தில் இருந்தது. இல்லாத பூமிக்கு நான் எப்படி அரசனாக ஆகமுடியும் என்று மனு ப்ரஹ்மாவைக் கேட்டார். அப்பொழுது ப்ரஹ்மாவிற்கு தும்மல் ஏற்பட்டது. அப்பொழுது அவர் மூக்கு ஓட்டையிலிருந்து ஒரு சிறிய பன்றி குட்டி கீழே விழுந்தது. அந்த வராஹமானது நான்முகன், மனு இருவரும் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுதே வானளாவிய உருவமெடுத்து ஜலத்திற்குள் மூழ்கியது. பாதாளத்திலிருந்து பூமியை தன் பற்களால் கவ்வி கொண்டு வந்தது. அப்பொழுது ஹிரண்யாக்ஷன் என்ற ஒரு அரக்கன் சண்டைக்கு வந்தான். அவனைக் கொன்று பூமியை ஜலத்தில் மிதக்க விட்டார் பகவான். பிறகு ஸ்வாயம்பு மனுவானவர் இந்த பூமிக்கு அரசனாக ஆனார் என்று பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த கதைக்கு வேதத்தில் கூறப்பட்ட வராஹ அவதாரம்தான் அடிப்படையானது என்ற உண்மை நம்மால் நன்கு அறியப்படுகிறது. இந்த கதையால் வராஹ அவதாரத்தின் வரலாறும், ஒரு பசுவை நாம் நன்கு பாதுகாத்தால் ஆயிரம் பசுக்கள் நமக்கு கிடைக்கும் என்ற உண்மையும் நன்கு புலப்படுகிறது. ■


श्री हरिः

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

சென்னை - 600 083.

**மதுரமுரளி வருடசந்தா - Reminder**

வருட சந்தா - உள்நாடு Rs. 60/- வெளிநாடு Rs. 300/-

***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDஆக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் **உடனே** அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன், மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078. Phone : 4714327

# சொல்லின் செல்வன் - 2

- பாலாஜி

ஹனுமானும், "அம்மா ஜானகி! நன்று நன்று ! தெய்வாதீனமாக என்னிடம் கேட்கலாமென்று, ஓரளவு நம்பிக்கையோடு கேட்கின்றீர்களே? உங்கள் ப்ராணநாதனது லக்ஷணங்களையும், லக்ஷ்மணனுடைய அங்க அமைப்புகளையும், அவை பொதுவாக காணப்படுமளவு கூறுகின்றேன். ராமனுடைய கண்கள், தாமரையின் இதழ்கள் போன்றவை. எல்லா உயிர்களையும் மகிழ்விக்கச் செய்யும்படியான கண்கள். பராக்ரமத்தில் சூரியனுக்கு நிகரானவர். பொறுமையில் பூமிதேவிக்கு நிகரானவர். உலகத்தை தர்மத்தில் நிலை நிறுத்துபவர். அனைவராலும் புகழப் பெற்றவர். ப்ரஹமசர்யத்தில் நிலைத்தவர். அகன்றதோளன், நீண்ட புஜங்களை உடையவர். ஶங்கு போன்ற கழுத்தை உடையவர். இவற்றால் அனைவரும் பெரும்புகழ் கொண்ட ராமபிரானைப் பற்றி கேட்டிருக்கின்றனர்.

நேரில் கண்டோர் மட்டும் அறியத்தக்க அடையாளங்களைக் கூறுகிறேன். துந்துபி வாத்யம் முழங்குவது போன்ற கம்பீரமான குரல், ஶ்யாமள வர்ணம், ஒளிநிறைந்த தேஹம், உடலோடு ஒத்து, ஏற்றக் குறைவின்றி ஸம அளவோடு பொருந்த அமைந்த அங்கங்கள்! ஒப்பற்ற பராக்ரமம் வாய்ந்த தோற்றம். இவ்வாறு ராமபிரானது குணங்களையும், லக்ஷணங்களையும் கூறிய ஹனுமார், ஸீதைக்கு மட்டும் தெரியும்படியான அங்க அடையாளங்களையும், குணங்களையும் கூறினார்.

இங்கு ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். என்னவென்றால் ஒருவனைப் பற்றி அவனுடைய அலுவலகத்தில் உள்ளவர்கள் ஓரளவிற்கு அறிவார்கள். அவனுடைய நண்பர்கள் அதைவிட அதிகமாக அறிவார்கள். அவனுடைய பந்துக்கள் அதைவிட அதிகமாக அறிந்திருக்கலாம். அவனுடைய பெற்றோர்கள் அதையும் விட அதிகமாக அறிவார்கள். ஆனால் எல்லாரைக் காட்டிலும் அவன் மனைவிதான் அதிகமாக அறிந்திருப்பாள். அதுபோல் மற்றெல்லாரைக் காட்டிலும் ஸீதைதான் ராமனைப் பற்றி அதிகமாக அறிந்தவள். அப்படிப்பட்ட ஸீதைக்கு ராமபிரானது குணங்களையும் ஶரீர லக்ஷணங்களையும் ஒரு ஸாதாரண

மனிதனால் முழுக்க எடுத்துரைக்கமுடியாது. அதனால், ராமன் சரியாக ஹனுமானைத் தேர்ந்தெடுத்து, பெரிய வானர ஸைன்யத்தில் ஹனுமானிடம் மட்டும் தன் மோதிரத்தைக் கொடுத்து ஸீதையிடம் அனுப்பினார். ஹனுமானும் இத்தனைநாள் ராமனைக் காணாது வருந்தும் ஸீதைக்கு, முழு போக்யமாக ராமபிரானுடைய குணங்களை வர்ணித்தார்.

அதனால் மிகவும் திருப்தியடைந்த ஸீதை, இவனுக்கு ராமனுடைய க்ருபை பூர்ணமாக உள்ளது என்று அறிந்து ஸந்தோஷித்தாள். அதனால் ஹனுமானை ராமனுடைய தூதன் என்று நிம்சயித்து ஹனுமானிடம், "நீ ராமபிரானுடைய தூதன்தான். ராமன் ஒருவனை தூதுக்கு அனுப்பினார் என்றால் அவன் ஸாமான்யனாக இருக்க முடியாது. அதிலும் என்னிடம் அனுப்புவோரை அவர் மிகமிகத் தேர்ந்துதான் அனுப்பி இருக்க வேண்டும்" என்றாள்.

பின்பு ஹனுமார் ராமபிரான் தன்னிடம் அளித்த மோதிரத்தை ஸீதையிடம் அளித்தார். அதனைக் கண்ட ஸீதை ராமனுடைய நினைவு பெருகியவளாய் கண்ணீர்வடித்து ராம, லக்ஷ்மணர்களுடைய க்ஷேமங்களை விசாரித்து, அவர்களுக்கும் வானரர்களுக்கும் ஸம்பந்தம் எப்படி ஏற்பட்டது என்று வினவினாள். அதற்கு ஹனுமார், "ஸீதே! தங்களுடைய க்ருபையால்தான் எங்கள் நட்பு ஏற்பட்டது" என்று ஸீதை, ரிஷ்யமுக பர்வதத்தில் எறிந்த நகைகளை ராமலக்ஷ்மணர்களுக்குக் காட்டியதைக் கூறினார்.

மேலும் ஸீதையைப் பார்த்து, "அம்மா! ஜானகிதேவீ! ப்ரபு தங்களைத்தான் நினைத்து எப்பொழுதும் வருந்துகிறார். அவர் இதுவரை உங்களை அழைத்துப் போகாததற்கு காரணம் உங்களுடைய இருப்பிடம் தெரியாததுதான். உங்களைத் தேடுவதற்காகவே இத்தனை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. உங்களைப் பிரிந்த ராமன் நல்ல ஆஹாரமெதையும் உண்பதில்லை. வானப்ரஸ்தனைப் போல் சிறிது உண்பதையே நியமமாகக் கொண்டிருக்கிறார். உங்கள் மீது மனதை செலுத்தியவராக தன்மீது ஊர்வனவற்றையும் விரட்டுவதில்லை. இரவு பகல் எந்நேரமும் சரியாக உறங்குவதில்லை. அவர் உறங்குவதே அரிதாகிவிட்டது. ஒருகால் சிறிது தூங்குவாராயினும் விழிக்கும்பொழுது ஹா ஸீதே! என்றுதான் திடுக்கிட்டு விழிக்கிறார்.



அந்த மஹாபுருஷன் செய்யும் முயற்சிகளனைத்தும் உங்கள் பொருட்டே! நிச்சயம் எத்தனை இடர் வந்தாலும் அவையனைத்தையும் மீறி உங்களை மீட்பார். சிறிதும் கவலை வேண்டாம்'' என்றார்.

ஹனுமாருடைய வாக்குகளைக் கேட்ட ஸீதை, ''வானரோத்தம! நீ தெரிவித்தது அமுதம் போல் இன்பந்தந்தது. ஆனால் ராமன் அல்லும் பகலும் என்னை நினைந்து சோகமுற்று வருந்துகிறார் என்பதைக் கேட்கும்பொழுது நஞ்சு கலந்த அமுதம்போல் துன்பமே பெருகுகிறது'' என்று பலவாறு கூறி கண்ணீர் வடித்தாள். அவளைப் பலவிதங்களில் ஸ்ரீஹனுமார் தேற்றினார். ''ஸீதே! தாங்கள் கவலைப்படாதீர்கள். நான் சென்று விஷயத்தைக் கூறியவுடனேயே ராமபிரான், பெரிய வானர ஸைன்யத்தைத் திரட்டிக்கொண்டு வருவார். அல்லது நானே உங்களை என் முதுகில் சுமந்து கொண்டு, அக்நியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸை அக்நி, இந்த்ரனிடம் சேர்ப்பதுபோல் ராமனிடம் சேர்க்கிறேன்'' என்றார்.

ஆனால் ஸீதை அதற்கு பலவாறு மறுத்து, இது ராமனால் அங்கீகரிக்கப்பட்டதல்ல என்று கூறினாள். இதனால் ராமாயணம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதென்று தெரிகிறது. பிறகு ஸீதையிடமிருந்து சூடாமணியைப் பெற்றுக்கொண்டு, ஸீதை மூலமாக திருசித்ரகூடத்தில் நடந்த காகாஸுர வ்ருத்தாந்தத்தைக் கேட்டு ஹனுமார், ஸீதையை மூன்று முறை ப்ரதக்ஷிணம் செய்து ஸேவித்து கிளம்புவதற்கு உத்தரவு கேட்டார்.

அப்பொழுது ஸீதை, ''ராவணன் எனக்கு இரண்டு மாதம் அவகாசம் கொடுத்துள்ளான். ஆனால், நான் இன்னும் ஒரு மாதம்தான் உயிர் வாழ்வேன். அதற்கு மேலாக ப்ரபு வரவில்லையாயின் நான் வாழேன்'' என்று கூறினாள். பிறகு ஸீதையிடம் விடைபெற்ற ஹனுமார், அசோகவனத்தை அழித்து, ராவணனுடைய ஸபையில் தைரியமாக ராவணனுக்கு உபதேசம் செய்து, அவர்கள் தன் வாலிலிட்ட தீயினால் லங்காபுரியையே எரித்து, மறுபடியும் ஸீதையிடம் விடைபெற்றுக்கொண்டு லங்கையைவிட்டு கிளம்பினார். நேரே தன் வானர ஸகாக்களுடன் ஸம்பாஷணம் செய்து ராமனுடைய இருப்பிடம் வந்து அடைந்தார்.

ஹனுமார் வருவதற்கு முன்கூட்டியே அவர்களுடைய வருகையை அறிந்த ஸுக்ரீவன், அவர்கள் மதுவனத்தை அழித்தது கேட்டு ராமபிரானிடம், "நிச்சயம் ஸீதை கண்டுபிடிக்கப்பட்டிருப்பாள். அதுவும் ஹனுமானைத்தவிர வேறு எவராலும் இந்த கார்யத்தை வெற்றிகரமாக முடிக்க முடியாது. ஹனுமானிடம்தான் எடுத்த கார்யத்தை முடிக்கும் திறமை, அதற்கான புத்திசாதுர்யம், கல்வி, வீரம், ஶாஸ்த்ரஞானம் ஆகியவை உள்ளது" என்று ஸந்தோஷமாகக் கூறினான்.

அச்சமயம், "கண்டேன் ஸீதையை" என்று கூறி ராமபிரானின் திருவடிகளில் வணங்கிய ஹனுமார், ஸீதை கூறிய எல்லா விஷயங்களையும் கூறி ஸீதையளித்த சூடாமணியையும் ராமனிடம் அளித்தார். அனைத்தையும் கேட்ட ராமன் ஸீதையை நினைத்து கண்ணீர்விட்டு ஹனுமாரிடம், "ஹனுமன்! உனக்கு எந்தவிதத்திலும் என்னால் ப்ரதி உபகாரம் செய்யமுடியாது" என்று கூறி ஹனுமாரை ஆலிங்கனம் செய்து கொண்டார்.

இப்படி ஹனுமார் தன் விடாமுயற்சியால் இன்னல்களைக் கடந்து ஸீதையைக் கண்டார். அங்கும் தன்னுடைய முயற்சி வீண் போகாமல் ஸீதையிடம் ராமனுடைய கதையைக் கூறி அறிமுகமாகி தன்னுடைய சொல்வன்மையால் ராமனுடைய குணங்களைக் கூறி ஸீதையை மகிழ்வித்து, அவளுடைய நன்மதிப்பைப் பெற்றார். பிறகு எதிரியினுடைய ராஜ்யத்தில், தான் ஒருவனாக மாட்டிக் கொண்டாலும், தைர்யமாக ராவணனுக்கு தர்மத்தை எடுத்துச் சொல்லி ராமனுடைய குணங்களைக் கூறி, ராவணனுக்கு உபதேசமும் செய்தார்.

பிறகு ராமனிடம் வந்து தன்னுடைய பராக்ரமங்களை விவரிக்காமல், "கண்டேன் ஸீதையை" என்று தூதின் ஸாரத்தை ராமனுடைய மனம் இனிக்கக் கூறினார். ஆகையால் ஹனுமானுடைய உயர்ந்த ஶீலத்தையும், வாக்கு சாதுர்யத்தையும், எடுத்த காரியத்தை முடிக்கும் தன்மையையும் அறிந்து, முதலிலேயே ஸ்ரீராமபிரான் ஹனுமாரிடம் தன்னுடைய மோதிரத்தைக் கொடுத்தனுப்பினார். அதனால் ஸீதையை ஹனுமார் பார்க்க வேண்டுமென்று, ஸ்ரீராகவன் முன்னமேயே ஸங்கல்பித்துவிட்டார் என்று தெரிகிறது. ■

# எந்தரோ மஹானுபாவுலு -15

யதிராஜரான ஸ்ரீராமனுஜருக்கு ஒரு காலத்தில் குருவாயிருந்து கொலைத் தொழில் வரை செல்லும் புத்தியைப் பெற்றிருந்த யாதவப்ரகாசர், அதே யதிராஜரின் குணங்களுக்கும், ஞான விசேஷத்துக்கும் அடிமையாகி யதிராஜரின் சீடராக மாறின கதையை பார்ப்போம்.

ஒருநாள், யாதவப்ரகாசரின் கிழத்தாயார் பேரருளாளனைத் தரிசிக்க வந்தவள், அப்படியே மடத்தில் ராமானுஜரையும் கண்டாள். ராமனுஜருடைய அருள் முகத்தையும் அறிவொளியையும் கண்டு அதிசயித்த அவள், தன் மகன் இந்த மஹாபுருஷனுக்குச் சீடனானால் கட்டாயம் பரம ஶாந்தியைப் பெறுவான் என்று கருதினாள். ராமானுஜரிடம் கடுமையாக நடந்து கொண்ட நாளிலிருந்து, யாதவப்ரகாசர் மன அமைதியையும், நிம்மதியையும் இழந்து தவித்துக் கொண்டிருந்தார். இந்த நிலைபற்றி அவரது தாயார் அறிந்திருந்தார். எனவே ராமானுஜரின் தெய்வீக மேன்மையை உணர்ந்து, அவரை பேரருளாளரின் அவதாரமாகவே எண்ணி, தன் மகன் யாதவப்ரகாசரை, இந்த மாமனிதரின் திருவடிகளில் சேர்த்து, தொண்டு செய்விக்க வைத்தால் அவருக்கு பெருநன்மை விளையும் என உறுதியாக நம்பினாள்.

வீடு திரும்பியதும், தன் மகனிடம் தன் உள்ள உணர்ச்சிகளை வெளிப்படுத்தி, ராமானுஜரை சரண் அடையுமாறு அவரை வற்புறுத்தினாள். தமது மாணவன் என்று அறிந்த ஒருவரை குரு பீடத்தில் அமர்த்தி ஏற்றுக்கொள்ள யாதவப்ரகாசருக்கு எளிதில் மனம் ஒப்பவில்லை. இப்படியே நிம்மதியிழந்து குழம்பி உலவி வருகையில், திருக்கச்சிநம்பியை எதிரில் கண்டார். அவரிடம், "ஸ்வாமி, என் மனம் அலை பாய்கிறது. அதை நிலைநிறுத்த ஒரு உபாயம் கூறுங்கள். நீங்கள் வரதராஜரின் திருமுகம், எல்லாம் அறிந்தவர், எனக்கு உதவுங்கள்" என்றார். திருக்கச்சிநம்பி அவரிடம், "நீங்கள் இன்று வீட்டுக்குச் செல்லுங்கள். எம்பெருமானிடம் உண்மையறிந்து நாளை உமக்கு செய்தி சொல்கிறேன்" என்றார்.

மறுநாள், யாதவப்ரகாசரிடம் திருக்கச்சிநம்பி, ராமானுஜருடைய பெருமையையும் அவருக்கு சீடராக ஆவதால் யாதவப்ரகாசருக்கு விளையக்கூடிய நன்மைகளையும் பற்றி எடுத்துரைத்தார். முதல் நாள் இரவு யாதவப்ரகாசருக்கும் கனவில் ஒரு தெய்வீக சக்தி தோன்றி ராமானுஜருக்கு சீடராகும்படி அறிவுரை அளித்திருந்தபடியால், பகலுணவுக்கு பிறகு நேரே மடத்துக்கு ராமானுஜரை தரிசிக்கச் சென்றார்.

யாதவப்ரகாசரைக் கண்டதும் ராமானுஜர் மிக்க மரியாதையுடன் அவரை வரவேற்று இருக்கை தந்தார். இந்த ஆதரவு, யாதவப்ரகாசரை மகிழ்ச்சியுறச் செய்தது. பொதுவாக, சில விஷயங்கள் பேசியதும் அவர் ராமனுஜரிடம், குழந்தாய்! உன் பரந்த அறிவையும் பணிவையும் கண்டு நான் மகிழ்ந்தேன். நீ ஸகுண ப்ரஹ்மத்தை வழிபடுவது மட்டுமே உயர்ந்தது என்று கருதுகிறாய். இதற்கு ஶாஸ்த்ர ஆதாரங்கள் காட்டமுடியுமா? என்று கேட்டார். இதற்கு ராமானுஜர், "கூரத்தாழ்வார், மிகப் பெரிய பண்டிதர். அவரிடமே ஶாஸ்த்ர ஸந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார். யாதவப்ரகாசர், அருகிலிருந்த கூரத்தாழ்வாரை விசாரிக்க, அவர் மிக வலுவாக வேதப் ப்ரமாணங்களையும், வேத வாக்கியங்களையும் எடுத்துரைத்து ஹரியே ஒப்பற்ற புகல்! நாராயணனே பரம் தெய்வம் என்று அறுதியிட்டு கூறியதைக் கேட்டு, யாதவப்ரகாசர் ப்ரமித்துப் போய் ஊமையாகி அமர்ந்திருந்தார்.

இனியும் யாதவப்ரகாசரால் ராமானுஜரது தெய்வீகத் தன்மைக்கு அடிபணியாமல் இருக்க இயலாமல் போயிற்று. உடனே ராமானுஜரின் திருவடிகளில், அவர் எவ்வளவு தடுத்தும் கேளாமல் பணிந்து அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "ஓ ராமானுஜா! நீ உண்மையிலேயே சக்ரவர்த்தித் திருமகனின் தமையன்தான். அறியாமையால் குருடாகி உன்னை உள்ளவாறு அறியாது இருந்து விட்டேன். பிழை பொறுத்து எனக்கு மாலுமியாக இருந்து ஸம்ஸாரக் கடலிலிருந்து என்னைக் காக்கவேண்டும். உன்னையே புகலாகக் கொள்கிறேன்" என தழுதழுத்து வேண்டினார். ராமானுஜர் அவரைத் தூக்கி நிறுத்தி அணைத்து அவரை அமைதிப்படுத்தினார். அன்றே தம் பழைய மாணவரிடம் யாதவப்ரகாசர் துறவறம் ஏற்று பாவனமான பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற்று காவியாடை அணிந்தார். ஆசாரியரிடம் "கோவிந்த ஜீயர்" என்ற திருநாமம் பெற்றார்.

இங்ஙனம் பேரின்பத்தை உணர்ந்து, பக்தி வழியில் செல்லத் துவங்கி, அகந்தை அழிந்து முற்றிலும் புதிய பரம வைஷ்ணவராகிய யாதவப்ரகாசரை, ராமானுஜர் ஒருநாள், "உங்கள் இதயம் இப்போது பரிசுத்தமாகி விட்டது. தேவரீர் உண்மையான வைணவனின் கடமைகளை விளக்கி வைணவ ஸமயம் பற்றி ஒரு நல்ல நூலை இயற்றும். அப்போது தாங்கள் பரமஶாந்தியை பெறுவீர்" என்றார். அவரது உத்தரவின்பேரில் யாதவப்ரகாசர், சுருக்கமாகவும் ஒப்பற்றதாகவும், "யதிதர்ம ஸமுச்சயம்" என்ற நூலை இயற்றி, ஆசாரியரின் திருவடிகளில் ஸமர்ப்பித்தார். அப்போது அவருக்கு வயது எண்பது.

பிறகு சில காலத்துக்குள் அவரது பூவுலக வாழ்க்கை முடிவு பெற்றது. ராமானுஜரின் இந்த அதிமானுஷ சக்தியைக் கண்டு முன்பு அவரைப் பற்றி இழிவாகப் பேசியவர்கள்கூட அவர் ஒப்பற்ற அவதாரம்தான் என உணர்ந்தனர். அவருடைய புகழ் மணம் பாரெங்கும் படர்ந்து வீசத்துவங்கியது.

ஆளவந்தார் இறையடி சேர்ந்த பிறகு, ஸ்ரீரங்கத்து மடம் உரிய தலைவரின்றி இருந்தது. பெரியநம்பியும், திருவரங்கப் பெருமாளரையரும், மற்றும் பல சீடர்களும், ஆளவந்தார் இல்லாத குறையை தீவிரமாக உணரலானார்கள். ஏற்கனவே ஆளவந்தார் மூலமாக ராமானுஜரை அவதார புருஷர் என கேள்வியுற்றிருந்த பெரியநம்பி ராமானுஜர் துறவறம் ஏற்றதை அறிந்து மகிழ்ந்தார். அரங்கனின் ஸன்னதிக்கு சென்று கைகூப்பி, ''பரிபூரண பரப்ரஹ்மமே! ராமானுஜரை உன் திருவடிவாரத்தில் கொண்டு வந்து சேர்த்து வைணவத்தைக் காத்தருளவேண்டும்'' என மனமுருகி ப்ராத்தித்தார்.

பெருமானே, திருவாய் மலர்ந்து அருளினார், ''பெரியநம்பியே! திவ்யப்ரபந்த பாசுரங்களை இசையுடன் பாடுவதில் வல்லவரான திருவரங்கப் பெருமாளரையரைக் காஞ்சீபுரத்துக்கு அனுப்பு. பேரருளாளன், இசையில் பிரியமுள்ளவன். அரையரின் இசையில் திருப்தி அடைந்து, வரம் தா இசைவான். அப்போது ராமானுஜரை ஸ்ரீரங்கத்துக்கு அனுப்புமாறு கேட்கவேண்டும். அவனது உத்தவரவின்றி ராமானுஜன் அவன் திருவடிகளை விட்டு அகலமாட்டான்'' என்றார்.

இங்ஙனம் அரங்கன் கட்டளை இட்டதும் சிறிதும் தாமதமின்றி பெரியநம்பி திருவரங்கப் பெரமாளரையரை காஞ்சீபுரத்துக்கு அனுப்பினார். அங்கே அரையர், தன் முழு வல்லமையையும் வெளிப்படுத்தி, பாசுரங்கள் பாடி பேரருளாளனை மகிழ்வித்து ராமானுஜரைத் தன்னுடன் அனுப்புமாறு வேண்டினார். தன் பக்தனான ராமானுஜரைப் பிரிய பேரருளாளனுக்கு திருவுள்ளமில்லை. எனினும் அவன் வரம் தரும் பெருமாள். ஆதலால், மிக்க சிரமத்துடன் வேதனையோடும் அந்த வேண்டுகோளுக்கு இசைந்து ராமானுஜருக்கு ஸ்ரீரங்கம் செல்ல உத்தரவு தந்தான்.

அரையர், ராமானுஜரை அரங்கனின் ஸந்நிதானத்துக்கு அழைத்து வந்தபோது தூய நெஞ்சமுள்ள வைஷ்ணவர்களும், ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த மக்களும் கொண்ட ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை.

அரங்கநாதன் ராமானுஜருக்கு இரண்டு அற்புத சக்திகளை அளித்தான். ஒன்று, துன்புற்றவர்களின் துயரை நீக்கும் வல்லமை. மற்றொன்று, பரமனின் அடியார்களை காத்தல். ராமானுஜரது பெருமையும் புகழும் மேலும் உயர்ந்தது. வெகு தொலைவிலிருந்துகூட ஜனங்கள் திரள்திரளாக வந்து அவர் திருவடிகளில் வணங்கலாயினர். திருமாலின் பெருமையை அவர் வாயிலாக செவியுற்று அனைவரும் ஆனந்தம் அடைந்தனர். அவரை லக்ஷியப் புருஷராய் கொண்டாடினார்.

ஸ்ரீரங்கத்துக்கு வந்த பிறகு ராமானுஜர், பெரியநம்பியையே ஆசாரியராக ஏற்று லக்ஷிய சீடராக நடந்து காட்டினார். அவரிடமிருந்து ந்யாஸ தத்துவம், கீதார்த்த ஸங்க்ரஹம், வ்யாஸ ஸூத்ரங்கள், பாஞ்சராத்ர ஆகமம் ஆகியவற்றைப் பயின்றார். அவரது ஒப்பற்ற அறிவாற்றலைக் கண்டு மகிழ்ந்த பெரியநம்பி அவரை சிறிது தொலைவில் உள்ள திருக்கோட்டியூர் நம்பியிடம் சென்று அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் பொருளைக் கற்று வருமாறு அனுப்பினார்.

இந்த உபதேசப்படியே ராமானுஜர் உடனே திருக்கோட்டியூர் சென்று, திருக்கோட்டியூர் நம்பியை தரிசனம் செய்து, அவர் திருவடிகளில் வணங்கி, தாம் வந்த நோக்கத்தை தெரிவித்தார். அதற்கு திருக்கோட்டியூர் நம்பி, ''இன்னொரு நாள் வா! பார்க்கலாம்'' என்றார். ராமானுஜர் மறுபடி வந்து திருக்கோட்டியூர் நம்பிகளிடம் பணிந்து வேண்ட, அந்த முறையும் அவர் உபதேசிக்க மறுத்துவிட்டார். இதேபோல் பதினெட்டுமுறை அவர் திருக்கோட்டியூருக்கு நடந்தார். அத்தனை தடவையும், நம்பி அவருக்கு உபதேசிக்க மறுத்துவிட்டார். தமக்கு ஏதோ தூய்மையற்ற தன்மை இருப்பதாகவும் அதனால் தான் அந்த பரம ஆசாரியர் தனக்கு அருள் புரியவில்லை என்றும் எண்ணி வருந்தினாரே ஒழிய, ராமானுஜர், திருக்கோட்டியூர் நம்பி மீது கோபமோ த்வேஷமோ சிறிதும் கொள்ளவில்லை. ராமானுஜர் மிக்க ஏக்கத்துடன் மனம் வருந்தி கண்ணீர் பொழியலானார்.

இவரது வருத்தத்தையும் ஏக்கத்தையும் சிலர் திருக்கோட்டியூர் நம்பியிடம் தெரிவிக்கையில் அவர் நெஞ்சம் கனிந்து ராமானுஜரை வரச்சொல்லி அவருக்கு திருஎட்டெழுத்து மந்த்ரத்தை உபதேசித்து பிறகு சொன்னார். ''பரமனான திருமாலைத் தவிர இந்த மந்த்ரத்தின் பெருமை யாருக்கும் தெரியாது. நீ தகுதியுள்ளவன் என பரீக்ஷித்து அறிந்ததால் உனக்கு உபதேசித்துள்ளேன். இதை வேறு யாருக்கும் நீ சொல்ல வேண்டாம்'' என எச்சரித்து அனுப்பினார்.

ஆசாரியரின் மந்த்ரோபதேசத்தால் ராமானுஜர் தெய்வீகசக்தி பெற்றார். பரமஸாந்தியைப் பெற்று அவர் குருபாத மலரில் பணிந்து தம்மை பேறு பெற்றவராக எண்ணினார்.

உபதேசத்தை குருமுகமாகப் பெற்ற ஸ்ரீராமானுஜர், உடனே ஸ்ரீரங்கத்துக்குப் போகவில்லை. திருக்கோட்டியூர் கோவில் கோபுர வாயிலை அடைந்ததும், அவருக்கு ஒரு அதிசயமான எண்ணம் தோன்றியது. வழியில் போகிறவர்கள் அனைவரையும் கூப்பிட்டு, ''தயவு செய்து கோவிலுக்கு வாருங்கள். நான் உங்களுக்கு விலைமதிப்பற்ற ரத்தினமொன்று தருகிறேன்'' என்றார். அவரது ஆனந்தமான உணர்வும், ஆர்வமான பேச்சும், ஒளிவீசும் அழகும், புருஷர்கள், ஸ்த்ரீகள், குழந்தைகள் அனைவரையும் கவர்ந்து, அவர்பால் ஈர்த்து அவர் பின் போக வைத்தது.

சிறிது நேரத்திற்குள் நகரமெங்கும் செய்தி பரவி ஏராளமான மக்கள் அங்கே திரண்டு வந்தனர். அனைவரையும் கண்டதும் ராமானுஜரது உள்ளத்திலிருந்து அன்பெனும் எல்லையற்ற கடல் பொங்கிப்பெருக அவர் முதலில் தம்முடன் வந்திருந்த முதலியாண்டான், கூரத்தாழ்வான் இருவருக்கும் அந்த ரகசிய மந்திரத்தை உபதேசித்து அவர்களை அணைத்துக்கொண்டார். பிறகு விரைவாக கோவில் கோபுர உச்சியில் ஏறி உரத்த மணிக்குரலில் அனைவரையும் நோக்கி பேசினார். ''நீங்கள் அனைவரும் எனக்கு பிரியமானவர்கள். இந்த உலக வேதனைகளிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு முக்தியைப் பெற விரும்பினால் நான் சிரமப்பட்டு கொண்டு வந்திருக்கும் இந்த ரத்திரனமான மந்திரத்தை என்னுடன் மூன்று முறை உச்சரியுங்கள். இதை செய்து பேறு பெற்றவர்கள் ஆவீர்களாக'' என்று கூறி, ''ஓம் நமோ நாராயணாய'' என்ற எட்டெழுத்து மந்திரத்தை உரக்கக் கூவி அதை பொதுவுடமையாக்க, வந்திருந்த கூட்டமும் ராமானுஜருடன் அந்த மந்திரத்தை ஓதி, பூவுலகே வைகுந்தமாக தோன்றியது. அனைவரின் முகத்திலும் சொல்லவொண்ணா ஆனந்தம் நிறைந்திருந்தது. அனைவரும் ராமானுஜரை வணங்கி விடைபெற்றனர். ராமானுஜர் தம் சீடர்களுடன் கோவில் கோபுரத்திலிருந்து இறங்கி தமக்கு இத்தகைய பேற்றளித்த ஆசாரியனை வணங்குவதற்காக திருக்கோட்டியூர் நம்பியின் திருமாளிகையை நோக்கிச்சென்றார்.

இதற்குள், ராமானுஜர் தன் கட்டளையை மீறி அஷ்டாக்ஷர மந்திரத்தை ஸகலருக்கும் உபதேசித்தது பற்றி கேள்வியுற்றிருந்த நம்பி கோபத்தில் கொதித்துக்கொண்டு இருந்தார். ராமானுஜர் அவரை



அணுகியபோது அவர் மிகவும் சினத்துடன் தனது ஆணையை மீறிய ராமானுஜரை கடிந்து, ஆசாரிய வார்த்தையை மீறினதால் அவருக்கு நரகத்தில் கூட இடம் கிடைக்காது என்று கடுமையாகப் பேசினார்.

ஆனால் ராமானுஜரோ வினயமுடன், ''ஸ்வாமி! அடியேன் நரகத்தில் வீழ்ந்து உழன்று துயருறவேண்டும் என்றே நான் தேவரீரின் வார்த்தையை மீறினேன். இந்த மந்திரத்தை கேட்பவன் எவனும் வாழ்வில் உயர்ந்த பேற்றைப் பெறுவான் என்று தேவரீர் அருளினீர்கள். அந்த உறுதியில் நம்பிக்கைகொண்டு ஒன்றுக்கும் உதவாத அடியேன் ஒருவன் மட்டும் கடும் நரகத்துக்கு சென்றாலும், ஆயிரமாயிரம் மக்கள் வைகுந்தம் சென்று இன்புறுவார்களே! என்ற எண்ணத்தினாலேயே நான் தேவரீரின் வார்த்தையைக் கடந்தேன். அதில் சந்தேகமில்லை'' என்று கூறினார். இதைக் கேட்டதும் திருக்கோட்டியூர் நம்பி தமது குறுகிய மனப்பான்மையையும், ராமானுஜரது சிறந்த வள்ளல் தன்மையையும் உணர்ந்து ராமானுஜரை ஆதரத்துடன் அணைத்துக் கொண்டார்.

அனைவரும், சீறும் நம்பி, ஶாந்த நம்பியாக மாறியதைக்கண்டு வியந்தனர். திருக்கோட்டியூர் நம்பி, கைகட்டிக் கொண்டு ராமானுஜரை நோக்கி, ''மகத்தான இதயம் படைத்தவரே! இன்று முதல் நீர்தான் என் குரு. இவ்வளவு பரந்த உள்ளம் உள்ளவன் உலகத்தந்தையான திருமாலின் அம்ஶமாகத்தான் இருக்கமுடியும் என்பதில் ஸந்தேகமில்லை. நான் ஸாமான்ய ஜீவன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்று சொன்னார்.

ராமானுஜரோ ஆசாரியன் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு தலை வணங்கி, ''தேவரீரே என்றைக்கும் எனது குரு. தங்களிடமிருந்து வந்ததால் தான் இந்த மந்திரம் இவ்வளவு தூய்மையும் சக்தியும் பெற்றதாக உள்ளது. தேவரீருடைய கட்டளையை மீறினாலும், தேவர்களுக்கும் கிடைப்பதற்கரிதான தங்களது அணைப்பைப் பெறும் பேறு பெற்றேன். அடியேனை தாங்கள் புதல்வனாக, தொண்டனாக ஏற்க வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தார். ராமானுஜரின் பணிவைக் கண்டு திருக்கோட்டியூர் நம்பி மிகவும் களிப்புற்றார். தனது மகனான தெற்காழ்வானை ராமானுஜரிடம் சீடராக ஒப்படைத்தார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**



# பாலகர்களுக்கு ஒரு கதை 21

- ஸ்ரீ ஸ்வாமிகள்

பரமேச்வரனிடம் உள்ள ஞானப்பழத்தை அடைய அவரின் குமாரர்களான கணபதியும், ஸுப்ரமண்யஸ்வாமியும் போட்டி போட்டார்கள். இருவருமே அந்த ஞானப்பழம் தனக்குத்தான் வேண்டும் என்று மிகவும் பிடிவாதமாக இருந்தார்கள். பரமேச்வரனும் தங்களுடைய இரு குழந்தைகளிடமும் ப்ரியம் வைத்திருந்தார். ஒருவருக்கு கொடுத்துவிட்டு மற்றொருவருக்கு கொடுக்காமல் இருந்தால் குழந்தைகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் போய்விடும். மேலும் தகப்பனாருடைய ப்ரியத்திலும் ஒரு பாகுபாடு இருப்பதாக அவர்களுக்கு தோன்றிவிடும். இதை ஸமாளிக்க சாதுர்யமாக ஒரு போட்டி வைத்தார். முதல் முதலாக இந்த உலகத்தை யார் சுற்றி வருகின்றார்களோ அவர்களுக்குத்தான் இந்தப் பழம் என்று கூறிவிட்டார். கணபதி மிகவும் பருத்த வயிருடன் இருப்பதால் தனக்கு முன் உலகத்தை வலம்வர முடியாது என்று நினைத்த ஸுபரமண்யஸ்வாமி, தன்னுடைய மயில் வாஹனத்தில் ஏறி உலகை வலம் வர கிளம்பினார். ஆனால் கணபதியோ, தாய், தகப்பனார் இருவருமே உலகிற்கு சமம் என்பதை அறிந்தவர். ஆகையால், பார்வதி பரமேச்வரரை வலம் வந்து பழத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டார். கோபம் கொண்ட ஸுப்ரமண்யஸ்வாமியோ பழநி மலைக்குச் சென்றுவிட்டார். இந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

மற்றொரு ஸமயம், இதுபோல் ஒரு நிர்பந்தம் வந்தது. பரமேச்வரனைச் சுற்றி கணங்கள் உள்ளன. அவர்களுக்கு நாயகனாக, அதாவது அதிபதியாக ஸஹோதரர்களுக்குள் யாரை நியமிப்பது என்று மீண்டும் குழப்பம் வந்தது. பரமேச்வரனும் முன்போலவே உலகத்தை யார் முதலில் வலம் வருகின்றார்களோ அவர்களுக்குத்தான் அந்தப் பதவி என்று அறிவித்துவிட்டார். ஸுப்ரமண்யஸ்வாமியோ இந்த முறை நிச்சயமாக நாம் ஏமாறக்கூடாது என்று தீர்மானித்து தாய் தகப்பனாரை சேர்த்து வலம் வர ஆரம்பித்தார். புத்திசாலியான கணபதியோ ராம நாமத்திற்குள்தான் இந்த ப்ரபஞ்சம் என்ற ரகசியத்தை அறிந்தவர். ஆகையால் ராம என்று பூமியில் எழுதி அதை வலம் வந்து அந்தப் பதவியைப் பெற்றுக் கொண்டுவிட்டார். அதனால்தான் அவருக்கு கணபதி (கணங்களுக்கு அதிபதி), கணநாதன் (கணங்களுக்கு நாதன் அல்லது நாயகன்) போன்ற பெயர்கள் பெற்றார்.

# மனஇறுக்கம் - 3

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

மனஇறுக்கம் என்ற இந்த தலைப்பில் இரண்டு மாதங்களாக எழுதி வரும் வ்யாஸத்திற்கு நல்ல வரவேற்புள்ளது. இது ஸம்பந்தமாக பலர் பல ஸந்தேஹங்களையும், மனஇறுக்கத்திலிருந்து வெளிவருவதற்கான ஆலோசனைகளையும் கேட்டு எழுதி உள்ளனர். அடிக்கடி சோர்ந்து உட்கார்ந்து விடுவதும், அதுபோல் சில ஸமயம் தலைகால் புரியாமல் உற்சாகத்தில் குதிப்பதும், மனஇறுக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்களின் நிலையாகும். அதோடில்லாமல், தான் சோர்ந்து இருக்கும்பொழுது மற்றவர் குதூஹலமாக இருந்தாலும், அதுபோல், தான் குதூஹலமாக இருக்கும்பொழுது மற்றவர்கள் சோர்ந்திருந்தாலும் அவ்வளவுதான். அவர்களை துளைத்துவிடுவார்கள்.

தனக்கேற்றார்போல் எல்லாரும் ஆடவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இவர்களிடம் அதிகமாக இருக்கும். நாளை முதல் நான் ஒருவேளை தான் சாப்பிடப்போகிறேன் என்றும், இனி மௌனவிரதம் இருக்கபோகிறேன் என்றும் அல்லது நாளை முதல் T.V. பார்ப்பதில்லை போன்ற பல ப்ரதிக்ஞைகளை செய்துகொள்வார்கள். ஆனால், ஒருநாள் கூட இந்த ப்ரதிக்ஞைகளை இவர்களால் காப்பாற்ற முடியாமல் போய்விடும். அப்படி இருந்தபோதிலும் இது போன்ற ப்ரதிக்ஞைகளை அடிக்கடி செய்து கொள்வார்கள். ஒரு ஸமயம், இவர்களிடம் நடைமுறைக்கு ஒத்துவராத காரியங்களை கூட ஸாதித்து விடமுடியும் என்ற அசட்டு துணிச்சலும், மற்றொரு ஸமயம் தேவையே இல்லாத தாழ்வுமனப்பான்மையும் மாறி மாறி காணப்படும். இவர்களுக்கு யாருடனாவது எப்போதும் ஓயாமல் பேசிக் கொண்டே இருக்கவேண்டும்.

தங்களுடைய வாழ்க்கையில் நடக்கும் அன்றாட ஸம்பவங்களுக்கு முட்டாள்தனமாக பல காரண காரியங்களை கற்பித்துக் கொள்வார்கள். உதாரணமாக, "நான் இன்னார் முகத்தில் தான் கண் விழித்தேன். அதனால் தான் இந்த துக்க ஸம்பவம் நடந்தது. இன்று இன்னாருடைய சட்டையை போட்டு கொண்டேன். அதனால் நல்லது நடந்தது என்பார்கள். இதுபோல் பலவிதமான கற்பனைகளை செய்துகொண்டு அதிலிருந்து வெளிவர முடியாதபடி தவிப்பார்கள். இவர்கள் தெய்வீக வாழ்க்கையில் இறங்கினால் போதும், கேட்கவே வேண்டாம். மஹான்களுடைய சரித்திரத்தில் பல பக்தர்கள், பல அவதாரங்கள் பற்றிய சரித்திரங்கள் வருகின்றன. உடனே

இவர்கள் அதை படித்துவிட்டு அந்தந்த அவதாரங்களுக்கு உரிய குணங்கள் தனக்கும் இருப்பதாக அதீத கற்பனை செய்து கொள்வார்கள்.

தனக்கு நடப்பது, நடக்கப்போவது எல்லாம் தெரிவதாகவும் கற்பனை செய்து கொள்வார்கள். இயற்கையாக நடக்கும் பல ஸம்பவங்களுக்கும் தங்களது மனோபாவத்திற்கு ஏற்றவாறு கற்பனை செய்து கொள்வார்கள். உதாரணமாக நேர்முக தேர்வுக்கு செல்லும் ஒருவர் பேருந்தை தவற விடுவாராயின், தமக்கு இந்த வேலை கிடைக்க போவதில்லை. அதனால் தான் பேருந்து நமக்கு கிடைக்கவில்லை போன்ற பல கற்பனைகளை செய்து கொள்வார்கள். இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு ஸந்தேகம் எழலாம். ஜோதிடம், நிமித்தம், ஸகுணம் போன்றவைகள் எல்லாம் இதை போன்றவைகள் தானே! அவற்றை நாம் நம்புகின்றோமே என்ற ஸந்தேகம் உங்களுக்கு எல்லாம் எழலாம். உண்மைதான்.

ஜோதிடம், ஸகுண ஶாஸ்த்ரம், நிமித்தம் போன்றவை மஹான்கள் காண்பித்த ஒரு மார்க்கம் ஆகும். வாழ்க்கையில் நடக்க இருப்பவைகளை ஜோதிடம், ஸகுண ஶாஸ்த்ரம், நிமித்தம் போன்றவை ஏதோ ஒரு விதத்தில் நமக்கு முன்கூட்டியே தெரிவிக்கின்றன என்பது உண்மைதான். நமக்கு நாமே தப்பும் தவறுமாக கற்பனை செய்துகொள்வது வேறு, ஸகுண ஶாஸ்த்ரம், ஜோதிடம், நிமித்தம் போன்றவை துணைகொண்டு புரிந்துகொள்வது என்பது வேறு. மேலும் ஜோதிடம், ஸகுணம், நிமித்தம் போன்ற ஶாஸ்த்ரம் மூலமும், திருவுளச்சீட்டு போன்றவை மூலமாகவும், நடக்க இருக்கின்ற விஷயங்களை சரியான விதத்தில் புரிந்து கொள்ள உபாஸனா பலமும் தேவை.

பொதுவாக, இந்த மனஇறுக்கம் உள்ளவர்கள் ஏதோ ஒரு விஷயத்தை பிடித்துக்கொண்டு அதிலேயே சுற்றி சுற்றி வருவார்கள். அலுவலகத்தில் தன்னிடம் பிரியமாக இருக்கும் மேலதிகாரி, மற்றவரிடமும் பிரியமாக இருக்க ஆரம்பித்தாரானால், இவருடைய முழு கவனமும் அந்த மனிதரை சுற்றியே இருக்கும். இவர்களுக்கு ஒரு பயத்தின் அடிப்படையில், ஸந்தேகத்தின் அடிப்படையில், ஒரு காரியத்தின் இயலாமை முன்னிட்டு மனஇறுக்கம் வரலாம். மேலும் இது விஷயமாக விரிவாக எழுதி கொண்டே போகலாமே ஒழிய இதற்கு முடிவென்பதே கிடையாது. ஆகவே இந்த மனஇறுக்கத்திலிருந்து வெளி வருவதற்கான உபாயங்களை கூறி இந்த கட்டுரையை முடித்து கொள்ளலாம்.

மனஇறுக்கத்தில் ஆரம்பகட்டத்தில் இருப்பவர்கள் தங்களை தானே சரியாக்கிக்கொண்டு இதிலிருந்து வெளிவந்து விடமுடியும். ஆனால் மன இறுக்கத்தில் உச்ச கட்டத்தில் இருப்பவர்களை உபதேசத்தினால் சரி பண்ண

முடியாது. காரணம், நாம் எவ்வளவுதான் அவர்களுக்கு எடுத்து சொன்னாலும், எத்தனைமுறை எடுத்து சொன்னபோதும், இதையெல்லாம் ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை என்று கேட்பார்கள். மேலும் நாம் சொல்லும் உபாயங்களை கடைபிடிக்கும் மனோபலமும் அவர்களிடம் இருக்காது. நாம் எடுத்து சொல்லும் விஷயங்களிலேயே பல ஸந்தேகங்கள் அவர்களுக்கு எழுந்து மீண்டும் குழப்பி கொள்வார்கள். ஆகவே இந்த நிலையில் உள்ளவர்களை மற்றவர்கள் தான் பொறுமையுடன் அவர்களுடன் ஒத்துழைத்து அவர்களை மனஇறுக்கத்திலிருந்து வெளிக் கொணரவேண்டும்.

நம்முடைய ஶாஸ்த்ரங்கள், நம்முடைய அன்றாட வாழ்க்கையை கூட நெறிபடுத்துகிறது. உதாரணமாக, குளியல் என்பது உடலிலிருக்கும் துர்நாற்றங்களை போக்கிக்கொள்ளத்தான் என்றாலும், இன்ன இன்ன காலங்களில் ஸ்நாநம் செய்யலாம் என்றும், இன்ன இன்ன காலங்களில் கூடாது என்றும் விதித்ததோடு மட்டுமல்லாமல், இதை ஒரு புண்ணிய செயலாகவும் கூறுகின்றது. அதேபோல் பசிக்குத்தான் ஆஹாரம் என்றாலும், இன்ன இன்ன காலங்களில்தான் சாப்பிடலாம் என்றும், இதை இதை தான் சாப்பிடலாம் போன்ற விஷயங்களை விதிக்கின்றது. ஆஹாரம் சாப்பிடுவதையும் 'அன்னதானம்' செய்வதையும் ஒரு உபாஸனையாகவே சொல்லப்படுகிறது. உலகில் எங்கும் காணாதபடி நம் மதத்தில்தான் காமத்திற்கும் ஒரு ஶாஸ்த்ரம் சொல்லப்பட்டுள்ளது. இவைகளிலிருந்தெல்லாம் என்ன தெரிய வருகிறதென்றால், மனதில் ஏற்படும் உணர்ச்சிகளுக்கெல்லாம் நெறிமுறைகளோடு கூடிய ஒரு வடிகாலும் தேவைப்படுகின்றது என்பதே!

ஸங்கீதம் நன்றாக பாடுபவரைப் பார்த்து உடனே நாமும் அவரைப் போன்ற பாடகனாக இல்லையே என்று மன இறுக்கம் உள்ளவர்கள் ஏங்குவார்கள். மறுநாள் ஒரு Cricket விளையாடும் ஒரு வீரரைப் பார்த்து, நாமும் ஒரு பெரிய Cricketerஆக இல்லையே என்று வருந்துவார்கள். இதுபோல், ஒவ்வொரு துறையில் இருக்கும் வல்லுனர்களையும், புகழ் வாய்ந்தவர்களையும் கண்டு, நாமும் அவர்களைப் போல் ஆகவேண்டும் என்று ஏங்குவதும், மனதின் ஒரு பலஹீனம்தான். மேலும் இது முட்டாள்தனமும் கூட. ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு திறமை மறைந்துள்ளது. 'உலகில் எதற்கும் பயன்படாதவன்' என்று எவருமே இல்லை. ஒவ்வொருவரிடம் இருக்கும் திறமையைக் கண்டுகொண்டு, அதை சரியாக வளர்த்துக்கொண்டாலே போதும். இருப்பதை விட்டு பிறப்பதை பிடிக்க ஆசைப்படுவதில் அர்த்தமே இல்லை. ஒவ்வொருவருக்கும் தாம் வாழும் வாழ்க்கையில் த்ருப்தியும், ஸந்தோஷமும், ஒரு பிடிப்பும்

இருக்கவேண்டும். சோம்பேறித்தனமும், அதிக பேச்சும், மிகவும் ஆபத்தானவை. அதிகம் பேசுபவர்களால் எந்த கார்யமும் செய்யமுடியாது. எவ்வளவுக்கெவ்வளவு பேச்சை குறைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு சிந்தனைத்திறனும் மனோபலமும் அதிகரிக்கின்றது. சோம்பேறியாக இருப்பவர்களின் மனது பல வீண் கற்பனைகளை செய்துகொண்டு வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ளும்.

சுவாமி விவேகானந்தர், சோம்பேறியாக இருக்கும் ஒருவனைப் பார்த்து, ''உன் கையில் ஒரு கத்தியை தருகிறேன். நீ யாரையாவது கொலை செய்துவிட்டு வா. நீ சோம்பேறியாக இருப்பதைவிட, அது ஒன்றும் தவறில்லை'' என்று கூறினார். எப்பொழுதும் கலகல என்று சிரித்து கொண்டு ஸந்தோஷமாகவும், ப்ரஸன்னமாகவும் இருக்கவேண்டும். நல்ல நண்பர்களுடனும், ஸாதுக்களுடனும் கலந்து பழகவேண்டும். நல்ல புத்தகங்கள் படிப்பதும் ஒரு ஸத்ஸங்கமே. எப்பொழுதும் மனதினாலும், பேச்சினாலும், செயல்களினாலும், Positiveஆக செயல்படவேண்டும். காரணம், எண்ணம், வாக்கு, செயல் இவைகளுக்கு ஒரு பலம் உண்டு. உதாரணமாக யாராவது, ''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால்'', அதற்கு, ''ஸந்தோஷமாக இருக்கின்றேனே, ஸௌக்கியமாக இருக்கின்றேனே'' என்று சொல்ல வேண்டும். எப்பொழுதும் குறைகளை சொல்லிக்கொண்டும், அழுமூஞ்சியாகவும் இருக்கக்கூடாது. நான் Positive ஆகத்தானே நினைத்தேன், எனக்கு Negativeஆகத்தான் நடக்கிறது என்று சொல்வது அரச மரத்தை சுற்றி வந்தவுடன் அடிவயிற்றை தொட்டு பார்ப்பது போலாகும். Positiveஆக நான் நினைத்தாலும், எனக்கு Negative ஆக தான் நடக்கும் என்று நினைத்துக்கொண்டே Positiveஆக நினைப்பது Positive thought ஆகாது.

வாழ்க்கையில் ஏதாவது ஒரு Purposeஐ create செய்து கொள்ள வேண்டும். குழந்தையில்லாதவர்கள் ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொள்வது கூட, தங்கள் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கவேண்டும் என்பதற்காகவே! அதுபோல், நாமும் நம் வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பரமார்த்திகமான வாழ்க்கையில், மோக்ஷம் என்பதே பிடிப்பு. ஆனால், அதே ஸமயம், அதற்கு ஓயாத உழைப்பு தேவை. நம்முடைய மதத்தில் ஸ்ரீராமநவமி, விநாயக சதுர்த்தி, கோகுலாஷ்டமி, நவராத்திரி போன்ற மற்றும் பல உத்ஸவங்கள் தெய்வீக அடிப்படையை கொண்டதாக இருந்தாலும்கூட, நமக்கு சோம்பேறித்தனம் இல்லாமல் இருப்பதற்காகவும், குதூஹலமாக இருப்பதற்காகவும் பலருடன் கலந்து பழகுவற்காகவும் ஏற்படுத்தபட்டவையே. இவைகளுக்கு இதுவும் ஒரு காரணமாகும். நம்முடைய மதத்தில் உள்ள பல விஷயங்கள் logicஐ

அடிப்படையாகக் கொண்டது. மேலும் எப்பொழுதும் குறைகளையே சொல்லுபவர்களுடனும், negative ஆக நினைப்பவர்களுடனும், மற்றவர்களின் குறைகளை கூறுபவர்களுடனும், பொழுது போகாமல் சோம்பேறிகளாக இருப்பவர்களுடனும், அடிக்கடி கலந்து பழகக்கூடாது.

இத்தகைய மனநிலை நம்மையும் பாதிக்க ஆரம்பித்து விடும். தன்னுடைய உரிமையை விட்டு கொடுக்காமல் பிறருடைய உரிமையை மதிப்பதே ஸம உரிமையாகும். உதாரணமாக, ஒருவர், ஏகாதஶியன்று விரதம் இருப்பவர், ஒரு நண்பருடைய வீட்டிற்கு ஏகாஶியன்று செல்கிறார். நண்பரோ ஏகாதஶியன்று சாப்பிடும் பழக்கம் உடையவர். நண்பரோ வீட்டிற்கு வந்தவர் சாப்பிடாமலிருக்கும்போது, நாமெப்படி சாப்பிடுவது என்று தயங்குகிறார். இந்நிலையில், நண்பரை ஆகாரம் செய்ய அனுமதித்து விட்டு அதே ஸமயத்தில் நாமும் நம் விரதத்தை விட்டுக் கொடுக்காமல் இருப்பதே ஸம உரிமையாகும். இதேபோல், நம் வாழ்க்கையிலும், எந்த சூழ்நிலையிலும், நம் உரிமையை விட்டுக் கொடுக்காமல் பிறருடைய உரிமையை மதித்து, adjust, adapt, accomodate போன்றவைகளை தாரக மந்திரங்களாக கொண்டு வாழ்ந்தால், வாழ்க்கை ஸுலபமாகிவிடும். நாம் பிடித்தவைகளை எல்லாம் இறைவன் கொடுக்கவேண்டும் என்று நினைப்பதைவிட, இறைவன் கொடுத்ததையெல்லாம் நமக்கு பிடித்தவைகளாக மாற்றிகொள்ளும் பக்குவத்தை அருள இறைவனை ப்ரார்த்தித்துக் கொள்ளவேண்டும்.

வனம் என்பது மிகவும் அருமையானது. அதே ஸமயத்தில் மிகவும் ஆபத்தானதும்கூட. மனஇறுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தை நான் விவரித்து கூறும்போது, பலருக்கு, ''நமக்கும் இவைகளெல்லாம் பொருந்துகின்றனவே'' என்று தோன்றியிருக்கும். ஆனால், அவைகளைப்பற்றி கவலைப்படவேண்டாம். 'மனம்' என்று ஒன்று இருக்கும் பக்ஷத்தில் இத்தகைய கற்பனைகள் தவிர்க்க முடியாதவையே! ஆனால், இத்தகைய கற்பனையில் யார் அதீதமாக இருக்கிறார்களோ, அவர்களே மன இறுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள்.

முடிவாகவும், சுருக்கமாகவும் சொல்லவேண்டும் என்றால், எதிலும் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு நிமிடம் கூட பொழுதை வீணாக கழிக்கக்கூடாது. பேச்சை குறைத்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டு, நல்லவர்களுடனேயே பழகி, நல்லதையே நினைக்கவேண்டும். எப்பொழுதும் Practicalஆக இருக்கவேண்டும். தெய்வ நம்பிக்கையுடன் வாழவேண்டும். இப்படியெல்லாம் பழகிக்கொண்டால் நாம் மனஇறுக்கம் இல்லாமல் எப்பொழுதும் ஆரோக்கியமாக வாழலாம். ■

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 48

பழனி ஆண்டவனே பகவான் ரமண மஹரிஷிகள் ரூபத்தில் அவதரித்து உள்ளதை தெரிந்து கொண்டார் வள்ளிமலை ஸ்வாமிகள். பகவானின் ஸன்னிதானத்திலேயே அவர் சிலகாலம் தங்கி இருந்தார். பகவான் அப்பொழுதெல்லாம் வள்ளிமலை ஸ்வாமிகள் திருப்புகழ் பாடுவதை கவனமாகக் கேட்டுக்கொண்டிருப்பார். தமிழில் சில சந்தங்களை எல்லாம் பிரித்துப்பாடுவது எப்படி என்பதை எல்லாம் பகவான் சொல்லி கொடுப்பார். பகவான் கிரிப்ரதக்ஷிணம் செய்து வந்த காலம். கிரிப்ரதக்ஷிணம் செய்துவரும்பொழுது எல்லாம், அன்பர்கள் அக்ஷரமணமாலை போன்ற பல பாடல்களை பாடிக்கொண்டு வருவது வழக்கம். வள்ளிமலை ஸ்வாமிகளும் பகவானுடன் கிரிப்ரதக்ஷிணம் செய்துவந்தார். அச்சமயம், தமிழில் உள்ள வேடிச்சி காவல், வேல்மாறல் வகுப்பு, கும்மி போன்ற பாடல்களை எல்லாம் பாடிக்கொண்டுவர, உடன் வந்த ஆந்திர தேசத்து அன்பர் ஒருவர், காவலனே காவலனே என்பதை காவ்லனே, காவ்லனே என்று பாட, இதை செவியுற்ற பகவான், புன்னகையுடன் ஹாஸ்யமாக அந்த அன்பரைப் பார்த்து, ஏமேமி காவ்லா, எந்தெந்த காவ்லா என்று வினவினார். அந்த அன்பரும் விடாப்பிடியாக இட்லி காவலா, காபி காவலா ஸ்வாமி என்று பதிலுரைத்தார்.

அப்பொழுதோ நள்ளிரவு 12 மணி இருக்கும். நல்ல இருட்டு. இப்பொழுதுபோலல்லாமல், அப்பொழுதுதெல்லாம் மரங்கள் அடர்ந்து காணப்படும். ஒருவர் அந்த இரவில், அப்புதரிலிருந்து வெளிப்பட்டு எல்லா அன்பர்களுக்கும் காபி, இட்லி எல்லாம் கொடுத்து உபசரித்தார். இந்த ஸம்பவத்தை கண்ணுற்ற அனைவரும் வியந்தனர். உயர்ந்த நிலையான அத்வைத மோக்ஷத்தை அளிக்கக்கூடிய இந்த மலையானது பக்தர்களின் காபி, இட்லி போன்ற அல்ப ப்ரார்த்தனைகளைக்கூட பூர்த்தி செய்து அதன் அபார கருணையை உணர்த்துகின்றது. அருணாசல மஹாத்மியத்தில் சரியாக நடக்க முடியாத முடவன் ஒருவன், பக்தி சிரத்தையுடன் இந்த மலையை வலம் வந்ததால், அவன் நன்றாக நடக்கும் சக்தியை அடைந்தான் என்ற ஸம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைப்பற்றி பகவானிடம் வினவுகையில் பகவான் தன் காலத்திலேயே அப்படி ஒரு ஸம்பவம் நிகழ்ந்ததாகவும் எடுத்துரைத்தார்.

நொண்டி ஸுப்பைய்யர் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். பெயருக்கேற்றாற்போல் அவருடைய ஒருகால் செயலற்று இருந்தது. ஆகவே, மரக்கட்டைகளின் துணைகொண்டே அவர் நடந்து வந்தார். அவரிடம் ஒரு அன்பர் திருவண்ணாமலையின் மஹிமையை எடுத்துரைத்து அந்த மலையை பக்தி சிரத்தையுடன் வலம் வந்தால், தங்கள் கால்கள் நல்ல நிலைமையை அடையும் என்று எடுத்து உரைத்தார். அதை செவியுற்ற நொண்டி ஸுப்பைய்யரும், திருவண்ணாமலைக்கு வந்து வாஸம் செய்து, பக்தி சிரத்தையுடன் பலமுறை மரக்கட்டை உதவியுடன் வலம் வந்தார். பலமுறை ப்ரதக்ஷிணம் செய்தும், பலன் ஏற்படாத நிலையில் விரக்தியுடன் தன் சொந்த ஊருக்கு திரும்பலாம் என்று யத்தனிக்கையில் ஒரு தேஜஸ்வியான புருஷர் அவர் முன் ப்ரத்யக்ஷமாகி வலுக்கட்டாயமாக அவருடைய கட்டைகால்களை பிடித்து தூக்கி எறிந்துவிட்டு, மிரட்டும் த்வனியில், "இப்பொழுது நடந்துபார்" என்று கூற, அவருடைய கால்கள் செயல்திறனை அடைந்து நன்றாக நடக்க முடிந்தது. திரும்பி பார்க்கையில் அந்த தேஜஸ்வியான புருஷனை காணவில்லை. இது பகவானின் காலத்திலேயே நடந்த ஒரு ஸம்பவம். பகவான் பழைய ஸம்பவங்களை நினைவு கூறும்பொழுது மற்றொரு ஸம்பவத்தையும் எடுத்துரைத்தார்.

பகவான் திருவண்ணாமலைக்கு வந்த புதிது. அருணாசலேஶ்வரரிடம் பக்தி, ஶ்ரத்தை கொண்ட ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். ஒரு ஸமயம் அவள் வெளியூர் சென்று விட்டு திரும்புகையில் புகைவண்டி நிலையத்திலிருந்து குதிரை வண்டியில் தன் வீடு நோக்கி பயணமானாள். குதிரை வண்டிக்காரன் தவறான எண்ணமுடையவனாக இருந்தமையால், வண்டியை ஏதோ ஒரு உத்தேசத்தில் மாற்றுப்பாதையில் ஓட்ட ஆரம்பித்தான். அந்த நிலையில் யாரோ ஒருவர் போல் அருணாசலேஶ்வரர் ப்ரத்யக்ஷமாகி, அந்த வண்டிக்காரனை மிரட்டி, சரியான பாதையில் ஓட்ட வைத்து, அந்த பெண்ணை பத்திரமாக வீடு சேர்த்து வைத்தார்.

- தொடரும்

ஸ்ரீ ஹரி:

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய ।
ஸ்ரீ ராதாக்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்
சென்னை - 600 083

# மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் ஆறாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

---

இடம் : மதுரபுரி

தேதி : 2-9-1999 முதல் 12-9-1999 வரை

---

நிகழும் ப்ரமாதி வருஷம், ஆவணி மாதம், 16-ம் தேதி (2-9-1999) வியாழக்கிழமை, கோகுலாஷ்டமி ஸுப தினத்தில் ஆரம்பித்து, மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஜனனோத்ஸவம் மதுரபுரியில் நடக்கின்றபடியால், பாகவதோத்தமர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

— நிர்வாகிகள்

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd.No.
TN/Chief PMG - 3/99

வேணு : 5 | ஆகஸ்ட் 1999 | கானம் : 1


ஸ்ரீ ஹரி:

## மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் ஆறாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 2-9-1999 | இரவு | நந்தோத்ஸவம் |
| 3-9-1999 | | சேஷவாஹனம் |
| 4-9-1999 | | ஸிம்மவாஹனம் |
| 5-9-1999 | | புன்னைமரவாஹனம் |
| 6-9-1999 | | ஏகாதசி – கருடவாஹனம் |
| 7-9-1999 | காலை | கோவிந்த பட்டாபிஷேகம் |
| | இரவு | யானை வாஹனம் |
| 8-9-1999 | இரவு | நிகுஞ்ஜோத்ஸவம் |
| | | நெய்வேலி ஸ்ரீ ஸந்தானகோபாலன் கச்சேரி |
| 9-9-1999 | இரவு | குதிரை வாஹனம் |
| 10-9-1999 | | ஜானவாஸம் |
| | | கடலூர் பாலசந்தர் - பாலமுருகன் (நாதஸ்வரம்) |
| 11-9-1999 | காலை | ராதை திருக்கல்யாணம் |
| | இரவு | தெப்பம் |
| 12-9-1999 | காலை | விடையாற்றி |

*தினமும் ப்ரவசனமும் கீர்த்தனமும் நடைபெறும்*


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar